<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP.No.81/2019</u>**

பெயர் : கந்தசாமி (RW1)

த/பெ. : மாரிமுத்து

தேதி : 09.04.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

இந்த வழக்கு சம்பந்தமாக மனுதாரர் பால்ராஜ் மீது காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகார் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் ஓட்டிச்சென்ற வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்தினை ஏற்படுத்தியதால் தான் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தரங்கம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் போலீசார் பதிவுசெய்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அதில் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் அபராதம் செலுத்தி வழக்கினை முடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டதற்கு காரணம் நான் தான் என்றாலும், அதனால் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்திற்கு இழப்பீட்டு தொகையை 1ம் எதிர்மனுதாரரான நான் தான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.